மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு – 1 சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் -ஆய்ச்சியர் குரவை

நாள்: 12.08.2020


- பாட ஆசிரியர்
- முனைவர் இ.சேனாவரையன்
- தமிழ் உதவிப்பேராசிரியர்
- அரசு கலைக்கல்லூரி ( தன்னாட்சி )
- கோயம்புத்தூர் - 641018. அலைபேசி 9486772491

## சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை – பாடப்பகுதி கொச்சகக்கலிப்பாவில் அமைந்த செய்யுள்

- தயிர் கடையச் செல்லல் 1-10
- கயலெழுதிய இமயநெற்றியின்
- அயலெழுதிய புலியும் வில்லும்
- நாவலந்தண் பொழில் மன்னர்
- ஏவல்கேட்ப பார்அர சாண்ட
- மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்
- காலை முரசம் கனைகுர லியம்புமாகலின்
- நெய்ம்முறை நமக்கின்று ஆமென்று
- ஐயைதன் மகளைக் கூஉய்க்
- கடைகயிறும் மத்தும் கொண்டு
- இடைமுதுமகள் வந்துதோன்றுமின்.

# தயிர் கடையச் செல்லல் 1-10 –செய்யுள் விளக்கம்

- பாண்டிய மன்னன் இமயமலையின் உச்சியிலே முதன்முதலில் தனது நாட்டின் சின்னமான கயல்மீன் சின்னத்தைப் பொறித்தான்.
- சில ஆண்டுகள் சென்றபின் கயல்மீன் சின்னத்திற்கு அருகே புலிசின்னத்ததை சோழமன்னனும், வில்லை சேர மன்னனும் பொறித்தனர்.
- சோழன், சேரன், நாவலந்தீவிலுள்ள ஏனைய அரசர்களும் தன் ஏவற்படி நடக்கும் வகையில் உலகம் முழுவதும் ஆண்ட முத்துமாலை அணிந்த பாண்டிய மன்னனின் அரண்மனையிலே பள்ளியெழுச்சி முரசு மிகுந்த ஒலியோடு முழங்கியது.
- முழங்கிய முரசு ஓசை கேட்ட ஆயர்முதுமகள் மாதரி அரண்மனைக்கு நெய் கொண்டு போய் கொடுக்கும் முறை தன்னுடையது என்று நினைவுப்படுத்திக் கொண்டு தன் மகள் ஐயையைக் கூவி அழைத்து தயிர் கடையும் கயிற்றையும் மத்தையும் எடுத்துக்கொண்டு தயிர்த் தாழியிடத்தே வந்தாள்.
- சொற்பொருள் விளக்கம்: கயல் - மீன் , கோயில் - அரண்மனை , நெய்ம்முறை – மோரிலிருந்து மத்து என்னும் மரத்திலான கருவியில் கயிறு கொண்டு சிலிப்பி நெய் எடுப்பர். அதை அரண்மனைக்கு கொண்டு செல்வது.

# உரைப்பாட்டுமடை

1. குடப்பால் உறையா குவியிமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு
2. உறிநறு வெண்ணெய் உருகா உருகும்
மறித்தெறித்து ஆடா வருவதொன் றுண்டு
3. நான்முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கும்
மான்மணி வீழும் வருவதொன் றுண்டு.

- உரைபாட்டுமடை விளக்கம்: தீய நிமித்தங்கள்
- 1. நாம் நேற்று பால் உறையிட்ட தாழிகளில் பால் தயிராக உறையவில்லை. திரண்ட திமிலையுடைய ஆண் காளைகளின் அழகிய கண்களிலிருந்து நீர் வழிகின்றது. ஆதலால், நமக்கு தீங்கு வருவதற்கு வாய்ப்பு உண்டு.

## உரைபாட்டுமடை விளக்கம்:தீய நிமித்தங்கள்தொடர்ச்சி

- 2. உறியிலே முதல்நாள் வைத்த மணமிகு வெண்ணெய் உருக்கினாலும் உருகவில்லை. ஆட்டுக்குட்டிகளும் துள்ளி விளையாடாமல் சோர்ந்து இருக்கின்றன. ஆதலால் நமக்கு வருவதொரு தீங்கு உண்டு.
- 3. நான்கு முலைக்காம்புகளைக் கொண்ட பசுக்கள் தம் உடல் நடுங்கி அலறுகின்றன! அப்பசுக்களின் கழுத்திலே கட்டிய மணிகளும் அறுந்து நிலத்தில் விழுகின்றன! ஆதலால், நமக்கு வருவதொரு தீங்கு உண்டு என்று கூறி, இத்தகைய தீய நிமித்தங்களால் ஏதோ துன்பம் நேரப்போகின்றது என மனம் தயங்கினாள் மாதரி.

# கருப்பம் ( கேட்டிற்குக் காரணம் )

- குடத்துப்பா லுறையாமையும் குவியிமி லேற்றின் மடக் கண்ணீர் சோர்தலும் உறியில் வெண்ணெ யுருகாமையும் மறி முடங்கியாடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டென மகளை நோக்கி மனமயங்காதே மண்ணின் மாதர்கணியாகிய கண்ணகியும் தான் காண ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல் நெடுங்கண் பிஞ்ஞையோ டாடிய குரவையாடுதும் யாம்என்றாள் கறவை கன்று துயர் நீங்குகவெனவே.

# கருப்பம் ( கேட்டிற்குக் காரணம் ) – பொருள் விளக்கம்

- அவள் தன் மகள் ஐயையை நோக்கி, “குடத்துப் பால் உறையாமையாலும், திரண்ட திமிலையுடைய ஆனேற்றின் கண்களிலிருந்து நீர் வழிதலாலும், உறியில் வைத்த வெண்ணெய் உருகாததாலும் ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடததாலும், பசுக்களின் கழுத்து மணிகள் அறுந்து கீழே வீழ்வதாலும் நமக்கு வருவதொரு துன்பம் உண்டு. ஆயினும், உள்ளம் வருந்தாதே! மண்ணக மாதர்க்கு அணியாக விளங்கும் கண்ணகியும் உடனிருந்து காணுமாறு முன்னர் ஆயர்பாடியில் எருமன்றத்தில் கண்ணன், தனக்கு முன்னவனாகிய பலராமனுடன் விளையாடிய பாலசரித நாடகங்களுள், வேல் போன்று நீண்ட கண்களையுடைய நப்பின்னையோடு ஆடிய குரவைக் கூத்தினை ஆடுவோம் நாம்! கறவைப் பசுக்களும் கன்றுகளும் துயர் நீங்குக! என்றே குரவை ஆடுவோம் நாம்! என்று உரைத்தாள்.

# கொளு(குரவைக்கூத்தின் கருத்து) சுட்டு (சுட்டிக்காட்டுதல்)

1. காரி கதன் அஞ்சான் பாய்த்தானைக் காமுறுமிவ்
   வேரி மலர்க்கோதை யாள்:

## சுட்டு

2. நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியவிப்
   பொற்றொடி மாதராள் தோள்

3. மல்லல் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
   முல்லையம் பூங்குழல் தான்

4. நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகும்இப்
   பெண்கொடி மாதர்தன் தோள்

5. பொற்பொறி வெள்ளையடர்த்தாற்கே யாகும்இந்
   நற்கொடி மென்முலை தான்

6. வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியள்இக்
   கொன்றையம் பூங்குழ லாள்

7. தூநிற வெள்ளை அடர்த்தாற் குரியளிப்
   பூவைப் புதுமல ராள்

கொளு(குரவைக்கூத்தின் கருத்து) சுட்டு (சுட்டிக்காட்டுதல்) – பொருள் விளக்கம்

1. கருநிறமுடைய எருதின் சீற்றத்தைக் கண்டு அஞ்சாது அதன் மீது பாய்ந்து அதனைத் தழுவி அடக்கியவனையே இத்தேன் நிறைந்த மலர் மாலையையுடையவள் விரும்புவாள்.

சுட்டு ( சுட்டிக்காட்டுதல்)

2. நெற்றியில் சிவந்த சுட்டியினையுடைய ஏற்றினை(காளை) அடக்கியவனுக்கே, இப்பொன்னாலான வளையலை அணிந்த பெண்ணின் தோள்கள் உரியவையாகும்.

3. வலிமிக்க இந்த இளைய ஏற்றினை அடக்கி அதன் மீதேறிச் செலுத்தியவனுக்கே இம்முல்லை மலரினைச் சூடிய அழகிய கூந்தலாள் உரியவள்.

# கொளு(குரவைக்கூத்தின் கருத்து) சுட்டு (சுட்டிக்காட்டுதல்) – பொருள் விளக்கம் - தொடர்ச்சி....

4. நுண்ணிய புள்ளிகளையுடைய இந்த வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கே கொடி போன்ற இப்பெண்ணின் விருப்பத்தைத் தரும் தோள்கள் உரியனவாகும்.

5. அழகிய பொன் போன்ற புள்ளிகளையுடைய இந்த வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கே இவ்வழகிய கொடி போன்றவளுடைய மெல்லிய முலைகள் உரியனவாகும்.

6. வெற்றி மிக்க இந்த இளைய காளையை அடக்கிச் செலுத்துபவனுக்கே, இக் கொன்றைப்பழம் போன்ற நிறத்தையுடையவள் உரியவள் ஆவாள்.

7. தூய நிறம் பொருந்திய இந்த வெள்ளக் காளையை அடக்கியவனுக்கே இக் காயாம் பூ போன்ற நிறத்தை உடையவள் உரியவள் ஆவாள்.

# எடுத்துக்காட்டு

- ஆங்கு,

  தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்

  எழுவர்இளங் கோதை யார்

  என்றுதன் மகளை நோக்கித்

  தொன்றுபடு முறையால் நிறுத்தி

  இடைமுது மகளிவர்க்குப்

  படைத்துக்கோள் பெயரிடுவாள்

  குடமுதல் இடமுறை யாக்குரல் துத்தம்

  கைக்கிளை உழையிளி தாரம்என

# எடுத்துக்காட்டு – செய்யுள் தொடர்ச்சி

- விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே.
- மாயவன் என்றாள் குரலை விறல்வெள்ளை
- ஆயவன் என்றாள் இளிதன்னை ஆய்மகள்
- பின்னையாம் என்றாளோர் துத்தத்தை மற்றையார்
- முன்னையாம் என்றாள் முறை
- மாயவன் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்
- வால்வெள்ளை சீரார் உழையும் விளரியும்
- கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள் வலத்துளாள்
- முத்தைக்கு நல்விளரி தான்:

# எடுத்துக்காட்டு – செய்யுள் தொடர்ச்சி

- அவருள்,
- வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
- தண்டாக் குரவைதான் உள்படுவாள் - கொண்டசீர்
- வையம் அளந்தான்தன் மார்பின் திருநோக்காப்
- பெய்வளைக் கையாள் நம் பின்னைதா னாம்என்றே
- ஐயென்றாள் ஆயர் மகள்.

# எடுத்துக்காட்டு – செய்யுள் விளக்கம்

- எடுத்துக்காட்டு – இசைப்பெயரிடல்
- மாதரி தன் மகள் ஐயையிடம், “ஏழு காளைகளை ஏழு கன்னியர் இதனை அடக்கியவனையே மணப்போம்” எனக் கருதி வளர்த்தனர் எனக் கூறி அந்த ஏழு கன்னியரை அழைத்து அப்பெண்களை மரபு வழியைப் பின்பற்றி அவர்களை நிற்க வைத்தாள். பிறகு, அவர்களுக்கு இயற்பெயர் இருந்தாலும் அப்பெண்களுக்கு இசைப் பெயர்கள் சூட்டினாள். அப்பெயர்களானது, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்பதாகும். என்பவையே அப்பெண்களுக்கு மாதரி இட்ட இசைப்பெயர்களாகும்.
- இசைப்பெயர்களின் பொருளானது பின்வருமாறு காண்போம்.

# எடுத்துக்காட்டு – செய்யுள் விளக்கம்

- குரல், - மிடற்றாற் பிறக்கும் இசை, யாழ் நரம்பின் ஓசை, யாழ்நரம்பு
- துத்தம் - நாவினால் பிறக்கும் இசை
- கைக்கிளை – அண்ணாத்தால் பிறக்கும் இசை, யாழிலோர் நரம்பு
- உழை – சிரத்தால் பிறக்கும் இசை, யாழின் ஒரு நரம்பு
- இளி, - நெற்றியில் பிறக்கும் இசை, யாழில் ஒரு நரம்பு
- விளரி - நெஞ்சால் பிறக்கும் இசை, நெய்தனிலத்தின் யாழ், யாழின் நரம்பு
- தாரம் - மூக்கால் பிறக்கும் இசை, வல்லிசை,வீணை நரம்பில் ஒன்று

# எடுத்துக்காட்டு – செய்யுள் விளக்கம் - தொடர்ச்சி

- இசைப்பெயர்கள் யார்? யார்? என்பதையும் குரவை ஆடுவதற்கு ஏற்ற நிலையில் நிற்பது பற்றியும் மாதரி சொல்லிய முறைகள்:
- குரல் - நரம்பின் பெயருடையவளை மாயவன் என்று கூறினாள்.
- இளி - நரம்பினை வெற்றி மிக்க பலராமன் என்றாள்.
- துத்தம் - நரம்பினை நப்பின்னை என்றாள்.
- ஏனைய நரம்புகள் முன்னைய முறைப்படியே என்றாள். இவ்வாறு கதாப்பாத்திரங்கள் குறித்து கூறிய பின்னர் எந்த முறை வரிசையில் நிற்க வேண்டும் என்று பின்வருமாறு மாதரி கூறியதைக் காண்போம்.

எடுத்துக்காட்டு – செய்யுள் விளக்கம் - தொடர்ச்சி...குரவை ஆட்டத்திற்கு நிற்கும் நிலைகள்

- எடுத்துக்காட்டு – செய்யுள் பகுதியில் மாதரி குரவையாட்டத்தில் ஏழு பெண்கள் எவ்வாறு நிற்க வேண்டும் என முறைப்படுத்தினாள்.
- மாயவன் என்று கூறப்பட்ட குரல் நரம்பினை அடுத்து வலதுபுறத்தில்
- நப்பின்னை எனப்படும் துத்தமும், தாரமும் நிற்கவேண்டும்.
- பலதேவன் என்று கூறப்பட்ட இளி நரம்பினை அடுத்து உழையும் விளரியும் நிற்க வேண்டும்.
- கைக்கிளை நப்பின்னைக்கு இடப்பக்கத்தே நிற்கவேண்டும்.
- முத்தை என்னும் சிறப்புப்பெயருடைய தாரத்திற்கு வலப்புறம் விளரி என்னும் பெயரிடப்பட்டவள் நிற்கவேண்டும்.

## எடுத்துக்காட்டு – செய்யுள் விளக்கம் - தொடர்ச்சி – ஆட்டத் தொடக்க நிலைகள்

- ஏழு மகளிருள் மாயவனின் கழுத்திலே வளமான துளப மாலையினை நப்பின்னை சூட்டினாள். பின் கூத்த நூல் மரபுக்கேற்றவாறு குரவை ஆடத்தொடங்கினர்.
- ஆட்டத்தின் தொடக்கமாக ஆயர் மகளான மாதரி, சிறப்பினைக் கொண்ட உலகினை அளந்த திருமால் தன் மார்பிலே இருக்கும் இலக்குமியினையும் விரும்பி நோக்காமைக்குக் காரணமானவள், வளையலையணிந்த நம் நப்பின்னைதான் என்று கூறி வியந்தாள்.
- குரவையாட்டத்தில் பாடி ஆடுதலை அடுத்த பகுதி நமக்கு உணர்த்துகிறது.

# கூத்துள் படுதல் – செய்யுள் - ஆடுவோம் வா.....

- அவர்தாம்,
- செந்நிலை மண்டிலத்தால் கற்கடகக் கைகோஒத்து
- அந்நிலையே யாடல்சீர் ஆய்ந்துளார் - முன்னைக்
- குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
- கொல்லைப் புனத்துக் குரந்தொசித்தாற் பாடும்
- முல்லைத்தீம் பாணியென் றாள்
- எனாஅக்
- குரல்மந்த மாக இளிசம னாக
- வரன்முறையே துத்தம் வலியா – உரன்இலா
- மந்தம் விளரி பிடிப்பாள் அவள்நட்பின்
- பின்றையைப் பாட்டெடுப் பாள்.

# கூத்துள் படுதல் – செய்யுள் - ஆடுவோம் வா...விளக்கம்

- சமநிலையில் முதலில் நின்றார்கள். பின் வட்டமாகக் கைகோர்த்து ஆடுவதற்குத் தாளவுறுப்பை ஆராய்ந்த அவர்களுள் மாயவனாகக் குறிக்கப்பட்டவள், தனது கிளையாகிய இளியிடத்து நின்றவளை நோக்கி,
- அகன்ற கொல்லையாகிய புனத்திலே வஞ்சகமாக வந்து நின்ற குருந்த மரத்தினை முறித்த மாயவனை முல்லையாகிய இனியப் பண்ணால் பாடுவோம்.... வா! என்றாள்.
- பாடத் தொடங்கியதும் குரல் தானத்தில் இருந்தவள் குரல் மந்த சுரமாகப்பாடினாள்.
- இளி தானத்திலிருந்தவள் குரல் சம சுரமாகப் பாடினாள்.
- துத்த தானத்திலிருந்தவள் குரல் வலி சுரமாக ஒலித்தன.
- விளரி தானத்திலிருந்தவள் வலியில்லாத மந்த சுரமாகப் பாட, தொடர்ந்து நப்பின்னையைக் குறித்து நின்றவள் பாடினாள்.

18BTA53C அலகு – 1

சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் -ஆய்ச்சியர் குரவை – வினாக்கள்

- இரண்டு மதிப்பெண் வினாக்கள்
- 1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்? - மதுரைக்காண்டம் -ஆய்ச்சியர் குரவை
- 2. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களைக் கொண்டது?
- 3. சிலப்பதிகாரத்தில் மதுரைக்காண்டத்தில் குறிப்பிடப்படும் பாண்டிய மன்னன் யார்?
- 4. சிலப்பதிகாரத்தில் குரவை கூத்தாடுபவர்கள் யார்?
- 5. சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் இமயமலையின் உச்சியிலே முதன்முதலில் தனது நாட்டின் எந்த சின்னத்தைப் பொறித்தான்?
- 6. பாண்டிய மன்னனின் அரண்மனையிலே பள்ளியெழுச்சி முழங்கிய முரசு ஓசை கேட்டு அரண்மனைக்கு வந்த ஆயர்முதுமகள் யார்?
- 7. ஆயர்முதுமகளின் மகள் பெயர் என்ன?
- 8. கண்ணன் யாரோடு குரவைக் கூத்தாடினதாக ஆயர் மகள் தெரிவித்தாள்?
- 9. மாதரி குரவையாட்டத்தில் எத்தனைப் பெண்கள் எவ்வாறு நிற்க வேண்டும் என முறைப்படுத்தினாள்?
- 10. மாதரி கூறியுள்ள இசைப்பெயர்கள் இரண்டினை எழுதுக.

# 18BTA53C அலகு – 1

## சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் -ஆய்ச்சியர் குரவை – குறுவினாக்கள்

- 1. சிலப்பதிகாரம் நூற்குறிப்பு தருக.
- 2. ஆய்ச்சியர் குரவை என்றால் என்ன?
- 3. ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிடப்படும் இசைப்பெயர்கள் என்னென்ன?
- 4. ஆய்ச்சியர் குரவையில் கூறப்படும் கண்ணனின் சிறப்புகளை எழுதுக.
- 5. ஆய்ச்சியர் குரவையில் மாதரி எவ்வாறு பெண்கள் முறைகளை நெறிப்படுத்தினாள்?
- 6. ஆய்ச்சியர் குரவையில் மாதரி மூலம் அறியலாகும் தீயநிமித்தங்கள் என்னென்ன?
- 7. ஆய்ச்சியர் குரவையில் நப்பின்னையை புகழ்ந்து பாடும் சிறப்பினை எழுதுக.
- 8. சிலப்பதிகாரம் - ஆசிரியர் குறிப்பு எழுதுக.
- 9. ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிடப்படும் மன்னர்களின் சிறப்பினை எழுதுக.
- 10. ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிடப்படும் பாண்டிய மன்னனின் சிறப்புகள் என்னென்ன?

# 18BTA53C அலகு – 1

## சிலப்பதிகாரம் - மதுரைக்காண்டம் -ஆய்ச்சியர் குரவை – நெடுவினாக்கள்

- 1. சிலப்பதிகாரம் அமைப்பும் சிறப்பும் குறித்து எழுதுக.
- 2. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையின் செய்திகளை எழுதுக.
- 3. சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை கூத்தாடுதலும் கண்ணனின் சிறப்புகளும் குறித்து எழுதுக.
- 4. சிலப்பதிகாரம் காப்பிய உருவாக்கமும் ஆசிரியர் சிறப்பும் குறித்து எழுதுக.